B. Resolutions.

RENAMING MADRAS STATE AS 'TAMILNAD'.

MR. SPEAKER : Hon. Member Sri P. S. Chinnadurai has spoken on the last non-official day for 10 minutes or so on this resolution. He may now continue his speech.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, before we take up the resolution for consideration, I would like to make a submission to the House.

கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்தைப் பற்றி விவாதிக்காமல் வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டும் அல்லது இதை இன்னொரு தேதியில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு முக்கிய காரணம், இன்றைக்கு இந்தத் தீர்மானம் இங்கு விவாதத்திற்கு வரும் என்பது எல்லோருக்கும் தெரியும். உள்நாட்டு அமைச்சர் அவர்களும் 28-ம் தேதியன்று இங்கு பதிலளிக்கும்போது தமிழ் நாடு என்று பெயரிடுவதைப் பற்றி சர்க்காருடைய கொள்கை என்ன என்பதைப் பற்றி இந்தத் தீர்மானத்தின்கீழ் விவாதம் வரும்போது சர்க்கார் கட்சித் தரப்பில் விளக்குவோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். இதற்கு மத்தியிலே இந்த மாநிலத்திற்கு தமிழ் நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்பதற்காக ஒரு போராட்டம் நடத்தவேண்டுமென்பதற்காக தமிழரசுக் கழகம் ஏற்பாடு செய்துகொண்டிருந்தது. அவர்களிடத்திலும் இந்த விஷயம் விளக்கப்பட்டது. கனம் அங்கத்தினர் சின்னதுரை அவர்கள்கூட ஒரு தந்தி கொடுத்திருக்கிறார்கள் என்பதை பத்திரிகையில் பார்த்தேன். அது ரொம்பவும் சரியான கோரிக்கைதான். அதுவும் தவிர இதைப் பற்றி இந்தச் சபையில் விவாதம் வரும்போது, இதே நாளன்று, இந்தக் கிளர்ச்சி—இந்த இயக்கம்—வேறு எங்கும் இல்லாமல், இங்கேயே, அங்கத்தினர்களும்கூட இங்கே உள்ளே வரமுடியாதபடி நடைபெறுமானால் இது வருத்தப்படவேண்டிய விஷயம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சூழ்நிலையில், சர்க்கார் தங்கள் கொள்கையை, இந்தக் கிளர்ச்சி இருக்கும்வரை விளக்கிச் சொல்லத் தயாராக இல்லை என்று தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகையால் இந்த விவாதத்தை இப்போது எடுத்துக்கொள்ளாமல் இதை வாபஸ் வாங்கிவிடுவதானாலும் சரி, அப்படியில்லையானால் இன்னொரு நாள்—நாம் 17-ம் தேதி கூடப்போகிறோம், 25-ம் தேதிதான் பட்ஜெட் வரப்போகிறது, அதற்கிடையில்—விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இதை ஏற்றுக்கொண்டு இந்தத் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதை ஒத்திப் போடவேண்டும், இதற்கு கனம் அங்கத்தினர் சின்னதுரை அவர்கள் ஒத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டால் உணர்ச்சிவசப்பட்டு ஏற்படக்கூடிய நிகழ்ச்சிகள் இருக்கின்றன. இப்போதைக்கு

30th January 1961] [Sri C. Subramaniam]

இதை ஒத்திப்போட்டு, சுமுகமான சூழ்நிலையில் விவாதிக்கலாம் என்று கனம் சின்னதுரை அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

Sri M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, இது கனம் அங்கத்தினர் சின்னதுரை அவர்களுடைய சொந்த விஷயம் அல்ல. இது சபைக்குச் சொந்தமான விஷயம். சபைக்கு வந்த பிறகு சபை அனுமதித்தால்தான் வாபஸ் பெற முடியும். சர்க்காருடைய கொள்கையைப் பற்றி நிதி அமைச்சர் அவர்கள் சொல்ல உரிமை உண்டு—நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் இந்தத் தீர்மானம் தமிழரசுக் கழகம் இன்றைக்குப் போராட்டம் நடத்தப் போகிறார்கள் என்று இப்போது கொடுக்கப்பட்ட தீர்மானம் அல்ல. இந்தத் தீர்மானம் ஐந்து மாதங்களுக்கு முன்னாலேயே சபையில் கொண்டு வரப்பட்டு விவாதம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. முன்பு நிதி அமைச்சர் அவர்கள் வெளிநாடு போவதால், திரும்பி வந்தவுடன் ஆற அமர விவாதிக்கலாம் என்று யோசனை சொன்னதற்கிணங்க கால தாமதம் ஏற்பட்டு இன்றைக்கு வருகிறது. வெளியிலே யாரோ ஏதோ செய்கிறார்கள் என்பதற்காக நம் கடமையைச் செய்யாமல் இருப்பது தவறு என்று நினைக்கிறேன். இன்றைக்கு ஏதாவது ஒரு கட்சி இந்தத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளவேண்டாமென்று சொல்லுகிறதா என்று பார்ப்பதற்காக எல்லா கட்சித் தலைவர்களையும் கண்டு பேசினேன். அவர்களும் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று தான் சொன்னார்கள். போலீஸ் அமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு நிதி அமைச்சர் அவர்கள் சர்க்காருடைய கொள்கையை விளக்குவார்கள் என்று கூறினார்கள். சர்க்கார் கௌரவத்தில் நிற்கக் கூடாது. எது நியாயம், எது நியாயம் இல்லை என்பதை பொது மக்கள் தீர்ப்புக் கூறட்டும். இதில் சர்க்காருடைய கொள்கை என்ன என்பதை விளக்க இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இன்று இந்தச் சபையின்மேல் நம்பிக்கை வைத்து, சபையின் நல்லெண்ணத்தில் நம்பிக்கை வைத்து இந்தத் தீர்மானத்தை அமைச்சர் அவர்கள் வேண்டாமென்று சொல்லாமல் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

Sri C. N. ANNADURAI : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மக்கள் மிக ஆவலாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்ற பிரச்னை பற்றிய விவாதத்தை வெளியில் நடக்கின்ற கிளர்ச்சிகள் உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் என்ற காரணத்தைக் காட்டி பேசவேண்டாம் என்று சொன்னால், அது துரைத்தனத்தாருடைய பலஹீனத்தைக் காட்டுகிறது என்று வெளியில் உள்ளவர்கள் நிச்சயமாகக் கருதுவார்கள். ஜனநாயக நாட்டில் கிளர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். ஜனநாயகத்தில், வெளியில் கிளர்ச்சி செய்கிறார்கள், ஆகையால் எதையுமே செய்ய மாட்டோம், சொல்ல மாட்டோம் என்று சொல்வதும், வெளியில் கிளர்ச்சி நடத்தப் போகிறார்கள்

[Sri C. N. Annadurai] [30th January 1961]

ஆகையால் இதைப் பற்றி சட்ட மன்றத்தில் விவாதிக்கக் கூடாது என்று சொல்லி விவாதத்தை ஒத்திப் போட்டு சட்ட மன்றம் தன்னுடைய கடமைகளிலிருந்து தவறிவிட, துரைத்தனத்தார் தூண்டுகோலாக ஆகிவிடுவார்கள் என்று அஞ்சுகிறேன். இதில் சர்க்காருக்குத் தயக்கம் இருக்க என்ன காரணம்? தமிழர்கள் இருக்கும் மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்கத் தயங்குவதற்குக் காரணம் என்ன? (கனம் ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம்: இப்போது அது பிரச்னை அல்ல.) ஒரு வார்த்தையில் சர்க்கார் கட்சித் தலைவர் தமிழ் நாடு என்று பெயர் வைக்கத் தான் போகிறோம் என்று சொல்லி விட்டால், எல்லோருடைய காதிலும் தேனை வார்த்ததற்குச் சமானமாக இருக்கும்—வாயிலே இல்லையென்றாலும். எல்லோரும் வெகு ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்போது, இந்த விவாதத்தை ஒத்தி வைக்க வேண்டும் என்று சர்க்கார் கட்சித் தலைவர் அவர்கள் கேட்கிறார்களென்றால், அதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. பல மேல்நாடுகளுக்குச் சென்று சுற்றிக்கொண்டு வந்திருப்பவர், நிதி அமைச்சர் அவர்கள் இப்படி ஒரு தந்திரம் மேல் நாடுகளிலிருக்கிறது என்று தெரிந்துகொண்டு வந்து சொல்லுகிறாரோ என்று எண்ண நேரிடுகிறது. இத்தனை பொருட்செலவுக்குப் பிறகு இந்தத் தந்திரத்தைத் தான் கற்றுக்கொண்டு வந்திருக்கிறார் என்று சொன்னால், போய் வந்த செலவு அத்தனையும் வீணாகும். மிகச் சாதாரணமான தீர்மானத்தை—அடிப்படை உரிமை பெற வேண்டிய தீர்மானத்தை—இங்கே பேச அனுமதி தருவதுதான் அறநெறி என்று இந்த ஆட்சியாளர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI P. S. CHINNADURAI: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்தைப் பற்றிய விவாதத்தை சுதந்திரமான முறையிலே நடத்துவதற்கு உண்மையிலேயே வெளியே நடைபெறுகின்ற கிளர்ச்சி ஒருவகையில் நிர்ப்பந்தத்தை உண்டாக்குகிறது என்பதை உணர்கிறேன். தர்மசங்கடமான ஒரு நிலைமையை தமிழரசுக் கழகம் இப்போது ஏற்படுத்தியிருக்கிறது. ஒரு நாளைக்காவது போராட்டம் ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்ட பிற்பாடுகூட, உடனே இந்தப் போராட்டத்தைத் துவக்கியிருப்பது அரசாங்கத்திற்கு ஒரு தர்ம சங்கடமான நிலையை ஏற்படுத்தி இருக்கிறது என்பதை நான் உணர்கிறேன். ஆயினும், அதே தர்மசங்கடமான ஒரு நிலைமையை சர்க்கார் கட்சித் தலைவர் அவர்களும் ஏற்படுத்த வேண்டாமென்று நான் மிகவும் மன்றாடி அவர்களை . வேண்டிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள்தான் ஒரு நாள்கூட ஒத்தி வைப்பதற்கு பொறுக்க மாட்டோம் என்று சொன்னாலும், அவர்கள்தான் கடமையிலே ஓரளவிற்குத் தவறிவிட்டார்கள் என்றாலும், நாமாவது நமது கடமையிலிருந்து தவறுமாறு இருக்கக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த சபையிலே இப்போது சர்க்கார் கொள்கையை அறிவிப்பதன் மூலம், கோடிக்கணக்கான மக்களுக்கு அந்த அறிவிப்பின் மூலம் மகிழ்ச்சி ஏற்படுமே தவிர, அதனால் உண்மையிலேயே சர்க்காருக்கு

30th January 1961] [Sri P. S. Chinnadurai]

பெருமைதான் ஏற்படுமே தவிர குறைவு ஒன்றும் ஏற்பட்டுவிடாது. இந்த சபையின் பெருமையும் அதனால் உயர்த்தப்படுமென்பதை நான் மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய உணர்ச்சிகள் எவ்வகைப்பட்டதாக இருந்தபோதிலும், கிளர்ச்சியை கருத்தில் வைத்துக்கொண்டு நாம் செயல்படக் கூடாது என்று நினைக்கிறேன். ஆகவே, இந்தத் தீர்மானத்தின் மீது சர்க்கார் கருத்தை, கொள்கையை ஒத்திப்போடாமல், மனம் விட்டு மகாத்மா காந்தியின் நினைவைப்பற்றி எடுத்துக் கூறுகின்ற இந்த புனிதமான நாளிலே வெளியிடுவதற்கு முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதனால் கோடிக்கணக்கான மக்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொண்டு இந்த விவாதத்தைத் தொடர்ந்து அனுமதிக்க சர்க்கார் கட்சித் தலைவர் அனுமதி அளிக்க வேண்டுமென்று நான் மறுபடியும் மன்றாடிக் கேட்டுக்கொண்டு, என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* Sri V. K. RAMASWAMY MUDALIYAR : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் ஸ்ரீ சின்னதுரை அவர்கள் கொடுத்த இந்தத் தீர்மானம் பல தடவைகள் இந்த சபை முன்பு கொண்டுவரப்பட்டிருக்கிறது. இப்பொழுது நினைத்துக்கொண்டு திடீரென்று கொண்டுவந்த தீர்மானமல்ல இது. ஆனால் இவ்வளவு நாளாக அந்தத் தீர்மானமானது அட்ஜெர்ன்மெண்ட் போடப்பட்டு, அதாவது தள்ளிவைத்துக் கொண்டே வந்திருக்கின்றோம். இதன் காரணமாக இதை ஒத்தி வைக்க வேண்டியதில்லை. ஆகையால், உடனே இதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

Mr. SPEAKER : Rule 79 of the Assembly Rules reads as follows :—

'A motion that any meeting or business be adjourned or postponed or that the House pass on to the business next in order in the list of business may be moved at any time and without previous notice as a distinct question, but not so as to interrupt a speech. If the motion is carried, the metting or business shall, subject to the provisions of sub-rule (3) of rule 21, be adjourned or postponed accordingly, or if the motion carried be that the House pass on to the business next in order in the list of business the business then under discussion shall be considered to be disposed of . . .'

I would therefore like the Hon. the Leader of the House to tell me whether he wants this House to adjourn now or pass on to the next item in the Agenda.

The Hon. Sri C. SUBRAMANIAM : I have suggested that further consideration of the resoultion be adjourned. I thought that I made that clear.

[30th January 1961

SRI M. KALYANASUNDARAM : If the Hon. the Leader of the House insists that it should be decided only by a vote . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : If it is not agreed unanimously, it is for the Chair to decide.

MR. SPEAKER : Under Rule 79 of the Assembly Rules whatever motion the Hon. the Leader of the House moves, I have to put it to vote.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, இதில் ஏதோ சர்க்கார் பலஹீனத்தையோ அல்லது தாமதத்தையோ ஒத்துக்கொள்ள வேண்டுமென்று யாரும் உண்மையிலேயே நினைக்க மாட்டார்கள் என்பதை நான் உணர்கிறேன். விவாதத்திற்காகத்தான் அவ்வாறு சொல்லப்படுகிறதே தவிர, உண்மையில் சர்க்கார் பலஹீனத்தை எடுத்துக் காட்டுவதற்கு இதிலே இடமேயில்லை என்பதை திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இது உடனடியாக நாளைக்கே நடக்காவிட்டால், ஒரு பெரிய தீங்கு நேரிடப்போகிறது என்று சொன்னால், இதை மாற்றுவதற்கான சூழ்நிலையை உடனடியாக விவாதிக்க வேண்டுமென்று நானும் உங்களுடன் சேர்ந்து கொண்டு, அதற்காக வாதாடுவேன் என்பதிலே சந்தேகம் கிடையாது. இது யோசிக்க வேண்டிய விஷயம். அப்படி யோசிக்கும்போது, எந்த விதத்திலும் நம்மை பாதிக்காமல் இருக்கும் வகையில் ஒரு முடிவுக்கு வர வேண்டும். இன்றைக்கு காலையில் கூட 8 மணிக்கு விவாதித்து இதைப்பற்றி ஒரு திட்டவட்டமான முடிவெடுக்க வேண்டுமென்று நாம் இருந்தோம். ஆனால் வெளியே ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சியின் காரணமாக அவ்வாறு முடிவு எடுக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன் இன்றைக்கு மக்களுக்கும் ஒன்று தெரிய வேண்டும். இதுமாதிரி அவசியமல்லாமல் கிளர்ச்சிகள் நடைபெறுகின்ற காரணத்தினாலே, எந்தவிதமான காரியமும் நடைபெறாது, அதனால் தடைதான் ஏற்படுகிறது என்பதை மக்களும் உணரவேண்டும். இந்த கிளர்ச்சி ஏற்பட்டதால்தான் தங்கள் காரியம் நடந்தது என்று சொல்வதற்கோ அல்லது கிளர்ச்சியின் காரணமாக ஒன்றும் காரியம் நடக்கவில்லை என்று சொல்வதற்கும் இதிலிருந்து இடம் ஏற்படுகின்றது. அதன் காரணத்தினால்தான் நான்கூட, இந்த கேள்வி விவாதத்திற்கு அவசியமானால், பின்னால் யோசனை செய்யலாம் என்று சொன்னேன். அந்த அடிப்படையில்தான் ஸ்ரீ சின்னதுரை அவர்களையும் இன்றைக்கு இந்த விவாதத்தை ஒத்திப்போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களும் இந்த அடிப்படையில் ஒத்திப்போடுவார்கள் என்று நம்புகிறேன். ஆகவே இன்றைக்கு நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், இப்போது நம் சபை முன்புள்ள இந்தப் பிரச்னை உடனடியாக, அவசரமாக செய்யக்கூடிய காரியமல்ல, ஆர அமர அமர்ந்து யோசனை செய்யவேண்டும். ஆகவே இப் பிரச்சினையை பிப்ரவரி மாதம் 17-ஆம் தேதிக்கு மேல், 25 தேதிக்குள் விவாதத்

30th January 1961] [Sri C. Subramaniam]

திற்கு எடுத்துக்கொண்டு ஒரு முடிவுக்கு வரலாம். அதனால் எந்த விதமான நஷ்டமும் ஏற்பட்டுவிடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிச் செய்வதால் ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படு வதற்கும் வசதியாக இருக்கும் என்ற கருத்தினை சொல்லி இதை ஒத்திப்போட வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். எல்லாக் கட்சித் தலைவர்களும் இந்த யோசனையை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இதை நான் பிரேரேபிக்கிறேன்.

Sri M. KALYANASUNDARAM : Sir, on a point of order. I want to know whether the Hon. the Leader of the House is only making an appeal or is moving a motion.

The Hon. Sri C. SUBRAMANIAM : I made that quite clear.

Mr. SPEAKER : He made it clear that he wants this subject to be adjourned. If that is not agreed to, I would have to put it to vote. 10-30 a.m.

Sri M. KALYANASUNDARAM : If it is to be decided by a vote, then no useful purpose would be served. He is not prepared to listen to the unanimous appeal made by the Leaders of Opposition Parties. If he is insisting on the voting of the House then we are afraid no useful purpose will be served by our sitting here. I do not propose to take part in the voting. We will walk out of the House.

Mr. SPEAKER : So far as the Chair is concerned, unless there is unanimity among all hon. Members, I have no option but to put it to vote.

The Hon. Sri C. SUBRAMANIAM : I have made a reasonable appeal to Opposition leaders and I do not think that they would lose anything by acceding to my request. I would again appeal to them not to make this a great issue and let us consider it in a leisurely and dispassionate manner after two weeks or 15 days. I would appeal to Sri Ramaswamy Mudaliyar, Sri Annadurai and Sri Kalyanasundaram to consider my suggestion.

Sri C. N. ANNADURAI : கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் திருப்பித் திருப்பி எங்களுடைய எண்ணத்தை மாற்றவேண்டும் என்று விரும்புவதால், திருப்பித் திருப்பி எங்களுடைய எண்ணத்தை வலியுறுத்தவேண்டியவர் களாக இருக்கிறோம். சர்க்கார் எந்த முடிவு எடுப்பதாக இருந் தாலும், இன்றைய விவாதம் அந்த முடிவு எடுப்பதை எந்த வகை யிலும் கெடுத்துவிடாது. கிளர்ச்சிக்கு மதிப்பு கொடுக்கக்கூடாது என்ற எண்ணத்திலே ஒரு ஜனநாயகக் கட்சியின் கொள்கை அமையுமானால், அந்த ஜனநாயகக் கட்சி உண்மையிலேயே ஜன நாயகத்தைப் போற்றவில்லை என்று வெளியிலே உள்ளவர்கள்

கருதுவார்கள். அதுமட்டுமல்ல, மெஜாரிட்டி எண்ணிக்கையில் முடிவு செய்வோம் என்று சொன்னால், அப்படிப்பட்ட முடிவுக்கு— தமிழ் நாடு என்று பெயரிடுவதுகூட எண்ணிக்கை பலத்தில் இருக்கும் என்று சொன்னால்—இந்த மன்றத்தில் இந்த விஷயம் பற்றி முடிவு எடுக்கப்படும் நேரத்தில் நாங்கள் வீற்றிருப்பது எங்களுக்கு வெட்கக் கேடு என்று நாங்கள் கருதுகிறோம். சர்க்கார் கட்சித் தலைவர் எங்களுடைய வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு தமிழ் நாடு பிரச்னையைப்பற்றி இங்கே பேசுவதற்கு உறுப்படமாட்டேன் என்று தெளிவுபட தெரிவித்தால், நாங்கள் இங்கே இருப்பதற்கு இல்லை, எழுந்து சென்று தமிழ் மக்களுக்கு பத்து பேர்களாவது இதற்காக இருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியையாகிலும் தெரிவிப்போம்.

Sri P. S. Chinnadurai : தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்து வதற்காக ஒரு மணி நேரம் சபையை ஒத்திவைப்பதாக இருக் கிறது. ஆகவே, இப்பொழுது சபையை ஒத்திவைத்துவிட்டால் பிற்பாடு பார்த்துக்கொள்ளலாம்.

Mr. Speaker : அதற்கு இன்னும் நேரம் இருக்கிறது. நீங்கள் ஏகமனதாக இல்லாவிட்டால் எனக்கு வேறு வழியில்லை. வோட்டுக்குத்தான் விடவேண்டும்.

The Hon. Sri C. SUBRAMANIAM : Sir, under rule 79 of Madras Assembly Rules, I move—

" That the discussion on the resolution of Sri P. S. Chinnadurai be postponed to a later date."

Leaders of Opposition parties and some Opposition Members staged a walk-out.

Mr. SPEAKER : The question is—

" That the discussion on the resolution of Sri P. S. Chinnadurai be postponed to a later date."

The motion was put and carried and the discussion on the resolution was postponed.

Mr. SPEAKER : The next two resolutions on the agenda are the resolution relating to the construction of a building for the Legislative Council standing in the name of Sri V. K. Kothandaraman and the resolution relating to the release of political prisoners
10-34 a.m. standing in the name of Sri N. K. Palanisami. As the hon. Members are not in their seats, the resolutions are considered to have been withdrawn. As there is no other business, I adjourn the House to meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.